பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 07 செவ்வாய்க்கிழமை (22-12-1992) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 26

# கிறிஸ்மஸ் காலத்தில் யுத்த நிறுத்தம் வரும்?

## புது வருடம் வரை நீடிக்குமாம்

கொழும்பு, டிசம்பர். 22

அடுத்து வரும் கிறிஸ்மஸ் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுப்படையினருக்கும் இடையே யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அத்தகைய யுத்த நிறுத்தம் புதுவருட காலம்வரையும் — அதற்கு அப்பாலும் – நீடிக்கக் கூடும்.

கிறிஸ்தவ அமைப்பு ஒன்று இத்தகைய முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக தமிழ் அரசியல் வட்டாரங்களை மேற்கோள் காட்டி, ''சண்டே ஐலண்ட்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

இந்த யுத்த நிறுத்த யோசனைக்கு விடுதலைப் புலிகள் பதிலளிக்கக்கூடிய சாத்தியக் கூறு காணப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

''யுத்த நிறுத்தமும் அமைதிப் பேச்சுவார்த்தையு ?''— என்ற தலைப்பில் 'சுமித்தா' எழுதிய விமர்சனத்திலேயே இந்தகவல் வெளியிடப்பட்டது.

''விடுதலைப் புலிகளுடன் சமாதான பேச்சுவார்த்தை என்று வார இறுதியில் அரசியல் வட்டாரங்களில் பேச்சடிபட்டது.

அரசு உயர் நிலை அதிகாரி ஒருவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தமிழ் அரசியல்வாதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# திலகருடன் பேச்சு நடத்த ஹமீத் பாரீஸ் பயணம்!

கொழும்பு, டிசம்பர் 22

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்து விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்து கொள்வதற்காக நீதி, உயர்கல்வி அமைச்சர் ஏ, ஸி. எஸ். ஹமீத் கடந்த வியாழன் பாரீஸ் பயணமானார்.

கொழும்பு தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு செய்தி வெளியிட்டிருக்கிறது.

பாரீஸில் தங்கியிருக்கும் விடுதலைப் புலிகளின் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகருடன் அமைச்சர் ஹமீத் பேச்சு நடத்துவார் என்று அவருடன் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவித்ததாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமரசப் பேச்சுவார்த்தைக்காக விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க மாட்டார்கள் என்றும் —

அதேவேளை, பேச்சுவார்த்தைக்காக ஆயுதங்களைப் பயன்படுத்தாமல் இருக்க வேண்டும் என்பதில் உடன்பாடு ஏற்பட்டுள்ளதாகவும்—

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டு சிங்கள மற்றும் முஸ்லிம் கட்சிகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட — இந்திய மாநிலங்களையொத்ததான — அதிகாரப் பரவலாக்கள் யோசனை குறித்து அமைச்சர் ஹமீத், புலிகள் பிரமுகர் திலகருக்கு விளக்குவார் என்றும் அச் செய்தியில் கூறப்பட்டது. (உ-த)

# சமாதான முயற்சி ஆரம்பம் கொழும்பு ஆயர் வரவேற்பு

கொழும்பு, டிச. 22

இனப்பிரச்சனைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் காணும் புதிய சமாதான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளதை கொழும்பு அதிமேற்றிராணியார் நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ வரவேற்றுள்ளார்

சமாதானப் பேச்சுகளின் போது சகல தரப்பினரும் திறந்த மனத்துடனும் தாராள மனப்பான்மையுடனும் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தமது நத்தார் தினச் செய்தியில் குறிப்பிட்டார்.

அவரின் செய்தியில் இருந்து சில பகுதிகள் வருமாறு:—

பேச்சுகளை ஆரம்பிப்பது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் திறந்த மனத்துடன் கோடி காட்டியிருப்பது மகிழ்ச்சி தருகிறது.

''நீண்ட காலமாகத் தாங்கள் புறக்கணிக்கப்பட்டு வருகிறோம் என்று வட பகுதி மக்கள் கருதுவதற்கு உரிய காரணம் உண்டு என்பதை நான் ஏற்றுக் கொள்ளுகின்றேன்'' —என ஜனாதிபதி பிரேமதாஸா கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும், நீண்ட கால இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண நீதி, நியாயம் நிறைந்த தீர்வு ஒன்று தொடர்பாகக் கருத்துடன்பாடு காணத் தயாராக இருப்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைக்கு ஆயுத விற்பனை பிரான்ஸ் தடை செய்யவில்லை

## பிரதமரின் பேச்சுக்கு பிரெஞ்சு அதிகாரி மறுப்பு

கொழும்பு, டிச. 22

உத்தியோகபூர்வமாகவோ அல்லது உத்தியோகபூர்வ மற்ற முறையிலோ இலங்கைக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதை பிரெஞ்சு அரசாங்கம் தடை செய்துள்ளது என்று கூறப்படுவதில் உண்மை ஏதும் இல்லை.

கொழும்பில் உள்ள பிரெஞ்சுத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் இப்படித் தெரிவித்தார்.

அண்மையில் பிரதமர் விஜேதுங்கா நாடாளுமன்றத்தில் பேசுகையில், இலங்கைக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வதை பிரெஞ்சு அரசு தடை செய்துவிட்டது என்று அறிவித்திருந்தார்.

ஆர்ஜென்ரீனாவிடம் இருந்து புக்காரா ரக போர் விமானம் கொள்வனவு செய்யப்படுவது தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமரின் கருத்துப் பற்றி கேட்டபோது பிரெஞ்சு தூதரகப் பேச்சாளர், அதில் உண்மை இல்லை என்றார்.

''ஆயுத விற்பனை அனைத்தும் பிரான்ஸில் சிரேஷ்ட அரசு அதிகாரிகளைக் கொண்ட அணைக்குழு ஒன்றினால் அங்கீகரிக்கப்படுகின்றன.

''இலங்கைக்கோ அல்லது வேறு நாடுகளுக்கோ ஆயுதம் வி[illegible] வனக்கள் இந்த அணைக்குழு

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வல்லைப் பாலம் பாவிக்க கட்டுப்பாடு

யாழ்ப்பாணம், டிச. 22

சேதமடைந்துள்ள வல்லைப் பாலம் மேலும் சேதமடைவதைத் தடுப்பதற்காக, கனரக வாகனங்கள் அப்பாதையால் செல்ல இன்று முதல் அனுமதிக்கப்பட மாட்டா என்று யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## ஷெல் தாக்கு

தென்மராட்சி, டிச 22

நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் பூநகரி முகாமில் இருந்து கச்சாய், கிளாலிக் கரைபோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கச்சாய் வீதி உளுத்தம்புலம் பிள்ளையார் கோவில் பகுதியிலும் ஷெல் விழுந்து வெடித்தது. (உ117)

## தெரிவுக் குழு ஜனவரி 16இல் மீண்டும் கூடும்

கொழும்பு டிச. 22

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு மீண்டும் எதிர்வரும் ஜனவரி மாதம் 16 ஆம் திகதி கூடவிருக்கின்றது.

(த-எ)

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், டிச. 22

இதுவரை தமிழீழ மீட்புநிதி செலுத்தாதவர்களின் வசதி கருதி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மீட்புநிதி சேகரிக்கப்படும் என்று தமிழீழ மீட்பு நிதிப்பிரிவு அறிவித்துள்ளது.

அன்று காலை வலிகாமம் பகுதியிலும், மாலையில் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளிலும் மீட்புநிதி சேகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ – 3)

## தோற்கடிப்பு

புதுடில்லி, டிச. 22

இந்திரா காங்கிரஸ் அரசின் மீது பாரதீய ஜனதாக் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை 228 பெரும்பான்மை வாக்குகளால் லோக சபையில் நேற்று தோற்கடிக்கப் பட்டது

பிரேரணைக்கு ஆதரவாக 106 எம். பிக்களும், எதிராக 334 எம். பிக்களும் வாக்களித்தனர். 47 எம். பிக்கள் வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் நடுநிலைமை வகித்தனர். (உ-எ)

## புதிய ஆயர் தெரிவு 9இல்

வட்டுக்கோட்டை, டிச. 22

தென்னிந்திய திருச்சபையின் புதிய ஆயர் தெரிவு எதிர் வரும் ஜனவரி 9 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப் படுகிறது.

தற்போதைய ஆயர் வண. டி. ஜே. அம்பலவாணர் ஓய்வு பெற இருக்கின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-க-ரி)

## முச்சந்தி முரளி



[illegible] கட்டத் திலை இருபறிப் படகு [illegible] பிணம்......!

# ஏப்ரல் மாதத்தில் ஜனாதிபதி தேர்தல்?

கொழும்பு, டிசம்பர் 22

அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கும் என கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று ஊகம் தெரிவித்திருக்கிறது.

இதேவேளை—

ஜனாதிபதித் தேர்தல் அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் நடக்கும் என நம்பப்படுவதாகவும் —

அத்தேர்தலை எதிர்கொள்ளத் தாங்கள் தயாராக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர்கள் கூறியுள்ளனர் என்றும் 'திவயின' சிங்கள வார இதழ் தனது முற்பக்கச் செய்தியில் தெரிவித்திருக்கிறது.

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் மூன்றுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிட இருப்பதை எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

லங்கா சமசமாஜக் கட்சி,

(3 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்தில் கிளர்ச்சி எந்நேரமும் வெடிக்கலாம்!

இராணுவத்தினர் மத்தியில் எந்த நேரமும் கிளர்ச்சி வெடிக்கலாம்.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் பத்திரிகை 'ராஜாளியா' வில் இத்தகவல் வெளியாகியுள்ளது.

''சமஷ்டி அரசமைப்பு முறை மற்றும் கருத்துடன்பாடுகள் ஆகியவை பற்றி பேசிக்கொண்டு அரசாங்கம் யுத்தத்தை தோல்வி நோக்கியே இழுத்துச்செல்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

நன்கு தகவலறிந்த வட்டாரங்களின் படி, இவை பற்றி எல்லாம் பரிசீலனை செய்கையில், இராணுவத்தினர் மத்தியில் அதிருப்தி நிலவுகின்றது என்பதும் —

எந்த நேரத்திலும் இராணுவத்தின் மத்தியில் கிளர்ச்சி வெடிக்கலாம் என்றும் தெரிகிறது. அப்படி நடந்தால் அது குறித்து ஆச்சரியப்படத் தேவையில்லை.''

—இவ்வாறு 'ராஜாளியா' வின்முதல் பக்கத் தலைப்புச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

# தினசரி 3 இராணுவத்தினர் தற்கொலை செய்கின்றனர்!

இராணுவத்தினர் மத்தியில் நாள் ஒன்றுக்கு மூன்று தற்கொலைகள் இடம் பெறுகின்றன

இராணுவத்தினர் மத்தியில் இருந்து கிடைத்த தகவல்களை மேற்கோள் காட்டி, ராவய பத்திரிகை இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

மேலும் பல இராணுவத்தினர் தங்களுக்குத் தாமே காயங்களை ஏற்படுத்திக் கொண்டு அதனைக் காட்டி லீவில் சென்று விடுகின்றனர். என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

# கடற்படை படகு மூழ்கியது: சிப்பாய் பலி; 7 பேர் மீட்பு!

திருகோணமலை உப்பாற்றில் கடற்படைப் படகு ஒன்று மூழ்கியதில் ஒரு கடற்படைச் சிப்பாய் இறந்ததாக அறிவிக்கப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இச்சம்பவத்தில் படகில்பயணம் செய்த 1 கடற்படைச் சிப்பாய், 3 பொலீஸார், 3 இராணுவத்தினர் காப்பாற்றப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த)

# கிராமசேவை அலுவலர் பரீட்சையில் 196பேர் தெரிவு

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ். மாவட்டத்துக்குரிய கிராம சேவகர்களைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற போட்டிப் பரீட்சையில் திறமையாகச் சித்தி எய்திய 196 பேரின் பெயர்ப்பட்டியல்

## பட்டியல் உள்ளே....

நேற்று யாழ். அரச அதிபருக்குக் கிடைத்தது. பரீட்சை ஆணையாளர் இந்தப் பட்டியலை அனுப்பி வைத்திருந்தார்.

இவ்வருடம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை உள்ளபடியான, (அந்தந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உரிய) வெற்றிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களிலிருந்து திறமை அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நியமிக்கப்படுவர்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் நேர்முகப் பரீட்சை நடத்திய பின்னரே நியமனங்கள் வழங்கப்படும்.

இவ்வருடம் ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்குத் தோற்றிய சுமார் ஏழாயிரம் பேரில் தெரிவாகியிருக்கும் முதல் தொகுதியினர் 196 பேரின் பட்டியல்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலிருந்து வந்த பாஜ்களும் பழுதடைந்தவை!

யாழ்ப்பாணம், டிச. 22

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்குவதற்கு வசதியாக கொழும்பில் இருந்து புனர்வாழ்வு அமைச்சு அனுப்பிய இரண்டு இழுவைப் படகுகளும் நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்தக் கூடியவை அல்ல என்று கண்டறியப்பட்டுள்ளது.

''நில்கிரி'' இழுவைப் படகு நேற்றுக் காலை கொண்டு வந்து சேர்த்த இரண்டு மிதவைப் படகுகளில் ஒன்று சிறிது சேதமடைந்து காணப்படுகிறது. அது எந்த நேரமும் பழுதடையலாம் அடுத்த இழுவைப் படகில் ஓட்டை இருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

பருத்தித்துறையில் இப்

(2 ஆம் பக்ம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எடிசன் அக்கடமி

(யாழ் இந்துக் கல்லூரி அருகில்)

441/1. கே. கே, எஸ். வீதி யாழ்ப்பாணம்

ஆண்டு 4 முதல் O/L வரை
அனைத்து வகுப்பிலும்
புதிய பிரிவுகள்

| | | |
|---|---|---|
| கணிதம் | : | பாஸ்கரன் - M. சிறிதரன் |
| விஞ்ஞானம் | : | J. R சூரி - J. J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி | : | K. S. முத்துலிங்கம் |
| தமிழ் | : | தங்கவேல் - குழந்தைவேலு |
| ஆங்கிலம் | : | மனோரஞ்சன் - இராஜலிங்கம் |
| வர்த்தகம் | : | விக்கி |

ஆரம்பம்: 24-12-92 பி.ப 3 மணி

(23730)


## நாய்களை வளர்ப்போருக்கான அன்பான வேண்டுகோள்

01. உங்கள் உள்ளூராட்சி மன்றத்தின் அனுமதிப் பத்திரம் பெற்று நாய்களை வளர்த்தல் வேண்டும்.
02. நாய்களை வீட்டிலேயே வளர்த்தல் வேண்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் உங்கள் நாய்களை வீதிக்குச் செல்லவிடாதீர்கள் வீதியில் காணப்படும் நாய்களை கட்டாக்காலி நாய்களாகக் கருதி அவை உள்ளூராட்சி மன்றத்தினால் பிடிக்கப்பட்டு அழிக்கப்படும்
03. உங்கள் நாய்களுக்குத் தவறாமல் விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றுவித்துக் கொள்ளுங்கள்.
04. தேவையற்ற நாய்களை அழித்தல் தொடர்பாக உங்கள் உள்ளூராட்சி மன்றத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.
05. இவ்வேண்டுகோளைக் கடைப்பிடித்து விலைமதிப்பற்ற மனித உயிர்களின் அனாவசிய இழப்புக்களைத் தடுப்பதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள்

உள்ளூராட்சித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.
92-12-21
( /4025)

சுந்தரம் டிவகலாலா
பிரதேச உள்ளூராட்சி,
உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.


## BITSMANS

கல்வி நிறுவனம், மானிப்பாய்.

துரிதமாக இலக்கணப் பிழையின்றி
ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
3 மாத பயிற்சி வகுப்புக்கள்

**SPOKEN ENGLISH with GRAMMAR**

By

Mr. M. A ஹரி B. A. Dip in-Eng.

ஆரம்பம்: 23-12-92 புதன் காலை 9-00

[சி/4024]


## கண்ணீர் அஞ்சலி

17 - 12 - 92 வியாழக்கிழமையன்று மரணமடைந்த
எமது பாடசாலை சாரண மாணவன்

### செல்வன் நாகராசா கமலராசா

அவர்களின் மறைவையொட்டி எமது
கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், சாரணர்கள்.

யாழ் கனகரத்தினம் மத்திய மகா
வித்தியாலயம்.

(23737)

## கண்ணீர் அஞ்சலி

வீர ஜனனம்: 1 - 03 - 1966



வீர மரணம்: 20 - 12 - 1992

### மேஜர் ஆசீர்
(கணேசபிள்ளை இராஜகுலசிங்கம்)
(கல்லூரி வீதி, திருமலை)

உனது மகத்தான வெற்றிகளும், சாதனைகளும்,
எங்கள் தேசத்தின் மறவாத வரலாறுகள்
நீ மடியவில்லையென்பது நாமறிந்தது; உனது
காட்டிய வெற்றிமனம் எம் கண்களில் நிறைந்தது
வென்று நீ குவித்த வெற்றிகள் நேற்று நடந்தவை
இன்றுவரை நீ இறந்தவனல்ல; இனியும்
இறந்து விடப்போகிறவனுமல்ல; எம்மோடு
கலந்தவன் நீ!

உனக்கு எமது வீர வணக்கங்கள் !!
வீர அஞ்சலிகள் !!!

''திருமலை நட்சத்திரங்கள்''
— விளையாட்டுக்கழகம்.

(23729)

# கிராமசேவை அலுவலர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வருமாறு:—

### தீவுப்பகுதி

பி. தர்மபூதி - நெடுந்தீவு, ஜே பிரான்சிஸ் சேவியர் - ஊர்காவற்றுறை, ஏ. அமரசிங்காமணி - யாழ்ப்பாணம், வி சுந்தரதாசன் - காரைநகர், ஜே. பத்திநாதன் - ஊர்காவற்றுறை,

எம். கனகரத்தினம் - நாரந்தனை வடக்கு, ஆர் திருப்புகழ் ஊர்சிங்கம் - காரைநகர், ரி. பாலச்சந்திரா - காரைநகர், ஜே அன்ரன் ஜெயகுமார் - ஊர்காவற்றுறை, ஏ. சுந்தராசா - ஊர்காவற்றுறை,

ஆர் சிறிஸ்கந்தராசா - வட்டுக்கோட்டை, இ ஜஸ்ரன் றோய் - ஊர்காவற்றுறை, ஆர். ரமேஸ் - யாழ்ப்பாணம், எஸ். நாகரட்ணம் - யாழ்ப்பாணம், ஆர் யோகேஸ்வரன் - மண்கும்பான்.

ஐ நித்தியானந்தன் - வேலணை, ஜே. பறசிலா - புங்குடுதீவு, எஸ். பகீரதன் - யாழ்ப்பாணம் கே இரத்தின சபாபதி - மீசாலை பி கருணானந்தன் - வேலணை 3.

ஆர் [illegible]சீகரன் - வேலணை 5 எஸ். இரத்திணேஸ்வரன் - அல்லைப்பிட்டி, ஜே. நாகராசா - வேலணை, பி. இராசேஸ்வரி - வேலணை 7, என். தனபாலசிங்கம் - புங்குடுதீவு.

### யாழ்ப்பாணம்

எஸ் யூலன் - குருநகர். சி ஜே சுரேந்திரா - 6ஆவது குறுக்குத்தெரு, எஸ். ஞானசேகரம் - குருநகர். என் லிங்கேஸ்வரன் - பிரப்பன்குளம் லேன், கே. விஜயரட்ணம் - 57, மருதடி லேன்,

கே. அமலாடுஸ்கம் - 24, றக்கா றோட் ஜே. யோகேந்திரா - கொழும்புத்துறை, ஏச் ஆனந்தராசா - 18, 2ஆது குறுக்குத்தெரு ஏ விமலேந்திரகுமார் - நாவாந்துறை வடக்கு. எம். இன்னாட்சென்ற் - பழைய பூங்கா வீதி பீ. ஏ. அருளானந்தம் - கோவில் றோட்

### நல்லூர்

கே. நிதறியானந்தன் - திருநெல்வேலி ஆர் ஜெயசுந்தரம் - கொழும்புத்துறை, எஸ். சிவமோகன் அரியாலை, என். இராகுலன் - கொக்குவில் கிழக்கு, என் ஜெயகாந்தன் - 70, பலாலி றோட்,

எஸ் ஜெயகுமார் - ஆறுகால்மடம், என் தேவநேசன் - கே கே. எஸ் வீதி எம். மகேந்திரன் - 38, பாரதி வீதி, எஸ் சிவநாதன் - 370/1, கஸ்தூரியார் றோட், ரி. ஆதவன் - அரியாலை,

எஸ். கி. பி. மொறாயஸ் - நல்லூர். பி. கனகநாயகம் - கொக்குவில் கிழக்கு, எஸ். பத்மராசா - வெள்ளப்பிள்ளையார் கோவிலடி, கே சூரியகுமாரன் - செங்குந்தா லேன்

### சாவகச்சேரி

ஜீ சிறிகாந்தன் - கைதடி, கே சுபாஸ்சந்திரபோஸ் - கொடிகாமம், சி தவீந்திரன் - மட்டுவில், கே நாகேஸ்வரன் - மந்துவில், என். கே யுபீந்திரன் - சாவகச்சேரி,

கே. பரமநாதன் - கைதடி வடக்கு வி. கணபதிப்பிள்ளை - சாவகச்சேரி, என் தனபாலசிங்கம் - மிருசுவில், கே. ஞானச்சந்திரன் - கொடிகாமம் எஸ் ஜெயலக்சுமன் மோகன் - சாவகச்சேரி,

ஆர். குணவதி - சாவகச்சேரி, எம். நவரத்தினம் - மிருசுவில், ஐ சண்முகநாதன் - சாவகச்சேரி, ஐ. விமலநாதன் - சாவகச்சேரி, கே. ஜெயகுமார் - கொடிகாமம்.

ஆர். தம்பித்துரை - கொடிகாமம், கே. ஐங்கரமூர்த்தி - கைதடி, வி லிங்கேஸ்வரன் - சாவகச்சேரி எம். மனோகரன் - சாவகச்சேரி, கே. வைகுந்தநாதன் - சாவகச்சேரி,

வி புவவேந்திரன் - மீசாலை, எஸ் பாலமுரளி - கைதடி, பி கலைகராசா - மிருசுவில், கே அருள்வேந்தன் - வரணி

### வடமராட்சி கிழக்கு

எம். வி தவராசா தாளையடி, எஸ். சிவலிங்கம் - முள்ளியான். எஸ். தோமஸ் யூட் - பருத்தித்துறை.

### வடமராட்சி வடக்கு

ஆர் யோகச்சந்திரன் - வல்வெட்டித்துறை, எஸ். டி. தேவகுமார் - அல்வாய், எஸ். தவனேஸ்வரன் - பருத்தித்துறை, என் சேகர் - பருத்தித்துறை எஸ் ரவீந்திரன் - பருத்தித்துறை,

வி. பிரேமச்சந்திரன் - தொண்டமனாறு, ஆர். தில்லைராசன் - பருத்தித்துறை, கே ரவீந்திரா - புலோலி, எஸ். சடகோபன் - வல்வெட்டித்துறை, ஏ. எம். தேவரட்ணம் - பருத்தித்துறை,

ரி சோமஸ்கந்தராசா - பருத்தித்துறை, பி. பாலதேவா - பருத்தித்துறை, எஸ். சதாசிவம் - புலோலி, கே. பாலச்சந்திரன் - பருத்தித்துறை, ரி. நாகலிங்கம் - பருத்தித்துறை, ஏ. இமானுவெல் யோசெப் - பருத்தித்துறை.

### கரவெட்டி

ரி. நித்தியரத்தினம் நித்தியானந்தம் - வல்வெட்டித்துறை. கே. ரவிகுமார் - கரவெட்டி, எம். சிவநேசன் - கரவெட்டி, பி. குமரசன் - கரவெட்டி, ரி. வதனரூபன் - கரவெட்டி,

பி. ஐயாத்துரை - கரவெட்டி ஏ விமலேந்திரன் - அல்வாய், ஜே ஜெபகரன் - கரவெட்டி, என். மகாநேசன் - உடுப்பிட்டி, வி. வைத்திலிங்கம் - கரவெட்டி,

எம். ஸ்ரீ. வேல்முருகராசா - கரவெட்டி, கே. புவனேந்திரம் - கரவெட்டி, கே. தர்மலிங்கம் கரவெட்டி, எஸ் குணசீலன் - கரவெட்டி,

### கோப்பாய்

ஐ. சிவனந்தம் - நீர்வேலி, எம். பஞ்சலோசுராசன் - அச்சுவேலி, ரி. சிற்சபேசன் - கோப்பாய், எஸ். உதயகுமார் - கோப்பாய், எஸ் ரி. வரதராசன் - கோப்பாய்,

ஜீ. குணேஸ்வரி - உரும்பராய், எஸ். வித்தியாபதி - புத்தூர், எஸ். முருகவேள் - அச்சுவேலி, எம். கிருஷ்ண கலாநிதி - கட்டப்பிராய் எஸ். எஸ். சலராசன் - அச்சுவேலி,

எம். விநாயகமூர்த்தி - அச்சுவேலி, ஐ. ராசரஞ்சன் - அச்சுவேலி, எஸ். சிவா - புத்தூர், வி. ரோகினிதேவி - அச்சுவேலி, கே. வசகரன் - கோப்பாய்,

கே. எழிலிச்செல்வன் - உடுவில் றோட், மானிப்பாய், ஏ. யோகராசா - புத்தூர், எம் ஜெயந்தன் - கோப்பாய், ஐ. அத்திலாமன் - புத்தூர், எஸ் அகிலேஸ்வரன் - கோப்பாய்,

எஸ். சிவராசா - புத்தூர், கே. கலைக்குமார் - புத்தூர் எம் உதயகுமார் - கட்டப்பிராய், எஸ். சவுந்தரராசா - புத்தூர்,

### வலிகாமம் கிழக்கு

கே ஜெயராஜசிங்கம் - கோப்பாய், ஜீ. கருணாநிதி - உரும்பராய், எஸ். சிவகுமார் - நீர்வேலி, ஐ பாக்கியராசா - நீர்வேலி மத்தி,

### வலிகாமம் வடக்கு

ஐ. செல்லர் - தெல்லிப்பழை, ஆர் இந்திரசித் - தெல்லிப்பழை, கே ஞானபாஸ்கரன் - சுன்னாகம், பி. தயானந்தி - காங்கேசன்துறை, ஐ. ஜெயகரன் - காங்கேசன்துறை,

வி. சுரேஸ் - காங்கேசன்துறை எஸ் சிறிஸ்கந்தராசா - உரும்பராய், எஸ். செல்வேந்திரன் - காங்கேசன்துறை, எஸ். சூரியகுமார் - தெல்லிப்பழை, என். நாகபத்மம் - மயிலிட்டி,

கே. செல்வகுமார் - தெல்லிப்பழை, என். ரவீந்திரன் - காங்கேசன்துறை, ஈ. கங்காதரன் - தெல்லிப்பழை, என். தேவதுலராசா - இளவாலை, எஸ். அல்பிரட் - காங்கேசன்துறை,

எஸ் பூபாலசிங்கம் - மல்லாகம், எஸ். வசந்தகுமார் - தையிட்டி,

### வலிகாமம் தெற்கு

ஆர். ஜெயக்குமார் - ஏழாலை, எஸ் லபோதரன் - புன்னாலைக்கட்டுவன், என். சிறிமன் - இணுவில், ரி. புவனேந்திரன் - இணுவில், வி. நாகேந்திரராசா - கொக்குவில், கே. நித்தியானந்தன் - கரவெட்டி, பி. வாசுகி - ஏழாலை, பி. ஜெயகரன் - ஏழாலை, என் வசிகரன் - சுன்னாகம், ரி. சுதாதரன் - சுன்னாகம்,

இ. வி. பிரபாகரன் - கொக்குவில், எஸ் சிவானந்தன் - சுன்னாகம், பி. பாலபத்மன் - சுன்னாகம், என். சிறிஸ் சோமஸ்கந்தமூர்த்தி - சுன்னாகம், கே. பகீரதன் - இணுவில்.

எஸ். சிவசக்தி - ஏழாலை, எஸ் பாலசுப்பிரமணியம் - சுன்னாகம்.

### வலிகாமம் தெற்கு-மேற்கு

எஸ். சி. உலகநாதன் - மானிப்பாய், கே. சுதர்சன் - சண்டிலிப்பாய், ஏச். செல்வராசா - மானிப்பாய், ஐ. ஐ. ஞானதீபன் - மாதகல், எஸ் ஏ. ஞானநாதன் - மாதகல்,

எஸ் சிறிஸ்கந்தராசா - பண்டத்தரிப்பு. வி. கே. தனபாலா - மானிப்பாய், எஸ். திருநீலகண்டன் - ஆனைக்கோட்டை, ஆர். இராசரட்ணம் - பண்டத்தரிப்பு, பி நிருபன் - மானிப்பாய்,

எஸ் இராசதுரை - ஆனைக்கோட்டை, ஜே. ஜே செல்வநாயகம் - பண்டத்தரிப்பு, எல். அருள்ராஜ் - மானிப்பாய், எம். சிறிதரன் - மாதகல், எம். ரவிராசா - மானிப்பாய்,

### வலிகாமம் மேற்கு

வி. குகநேசன் - சித்தன்கேணி, கே. - கணேசலிங்கம் சுழிபுரம், கே. சிவகுமாரன் - பண்டத்தரிப்பு, எஸ். ஜீவராசா - சுழிபுரம், பி. லலிதாம்பாள் - சங்கரத்தை,

பி. சண்முகம் - சங்கரத்தை, பி தியாகராசா - சங்கானை, கே. ஸ்கந்தராசா - சங்கானை, எஸ் எம். ஜெயநாதன் - வட்டுக்கோட்டை, ஐ. ரவீந்திரன் - சுழிபுரம்,

ஏ. கருணாகரன் - சுழிபுரம், எஸ். பிரபாகரன் - சங்கானை, எம். ஜெகராசா - வட்டுக்கோட்டை, ஏ. செல்வராசா - சுழிபுரம். ★

## கொழும்பிலி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போது உள்ள மூன்று இழுவைப் படகுகளும் பழுதானவையே. அவற்றுக்குள் தண்ணீர் உட்செல்வதால் அடிக்கடி அள்ளி ஊற்றியே, பொருள்களை ஏற்றி இறக்கும் வேலைகள் நடைபெறுகின்றன. மற்றும் இரண்டு இழுவைப் படகுகள் முற்றாகச் சேதமுற்ற நிலையில் உபயோகத்தில் இன்றிக் கிடக்கின்றன.

இழுவைப் படகுச் சேவையை சிறாக்குவதற்கென கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட படகுகளும் இவ்குள்ளவற்றின் ''அண்ணன் — தம்பி'' நிலையிலேயே உள்ளன. (அ-3-162

## கிறிஸ்மஸ்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவரும் விடுதலைப் புலிகளின் உயர் தலைவர்களைச் சந்தித்து சமாதானப் பேச்சுகளை நடத்தலுடன் செல்ல விருந்தனர் என்றும் அவ்வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

சமாதானப் பேச்சு நடத்த விடுதலைப் புலிகள் அண்மையில் விருப்பம் தெரிவித்ததைத் தொடர்ந்தே சமாதான நடவடிக்கை பற்றி ஊகம் எழுப்பப்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

அடுத்த ஆண்டு ஏப்ரலில் நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படும் ஜனாதிபதித் தேர்தலுடன் இணைந்த ஒன்றாகவே இந்த சமாதான நடவடிக்கைகள் உள்ளன.

★ யுத்த நிறுத்தம்—

★ ஜனாதிபதி தேர்தல் வரை அல்லது அதற்குப் பின்னரும் அமைதிப் பேச்சுக்கள்—

★ நாடாளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினைக்குத் தீர்வு தொடர்பாக நாடாளுமன்றத்தில் அடுத்த ஆண்டு பெப்ரவரியில் சமர்ப்பிக்க உள்ள இறுதி அறிக்கை—

★ துரித கதியில் நிறுவப்பட்டுவரும் 200 ஆடைகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள்—

இவை எல்லாம் விரைவில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கலாம் என்பதையே கோடிகாட்டுவதாக அரசியல் ஆய்வாளர்கள் நம்புகின்றனர்.'' - இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது (உ-எ)

## இலங்கைக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடம் இருந்து முன் அனுமதி பெறவேண்டும். எப்படியாயினும் இதுவரை இலங்கைக்கு ஆயுதம் விற்பதற்காக எந்த பிரெஞ்சு நிறுவனமும் அனுமதி கோரவில்லை—''

—இவ்வாறு பிரெஞ்சு அதிகாரி கூறினார். (த-எ)


## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)

441/1, கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்

## SPOKEN ENGLISH
**By: Mr. BRITTO**

புதிய பிரிவு ஆரம்பம்: 24-12-92

(23735)


## ஹோம் பினான்ஸ் வைப்பாளர் கவனத்திற்கு

முதலாவது கொடுப்பனவுக்கான கடிதங்களைத் தலைமைக் காரியாலயத்திலிருந்து பெறப்பட்டவர்கள் தங்களது நிலையான வைப்புக்கான சான்றிதழ்களின் போட்டோ பிரதிகளை 140, பலாலி வீதியில் உள்ள எமது காரியாலயத்தில் கையளிக்கும்படி கேட்கப்படுகிறார்கள்.

கொடுப்பனவுக்கான காசோலையைப் பெற்றிருந்தும், பலர் இன்னமும் அவற்றை வங்கியில் இடவில்லை என அறியப்படுகிறது. அவற்றை உடனடியாக வைப்பில் இடும்படியோ அல்லது அக்காசோலைகளை புதுப்பிப்பதற்காக தலைமைக் காரியாலயத்திற்கு உடனடியாக அனுப்பிவைக்கும்படியோ கேட்கப்படுகின்றனர்.

அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்
ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்

(23730)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

அமரர்

### நமசிவாயம் சபாரத்தினம்

அவர்கள்

(முன்னாள் ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

ஸ்கந்தா அன்னையின் தன்னிகரற்ற
ஆசிரியர்களில் ஒருவராக விளங்கியவரும்,
தலைசிறந்த கல்விமானுமாகிய
அமரர் நமசிவாயம் சபாரத்தினம்
அவர்களின்
ஆத்மா சாந்தியடைய
இந்நாளில் எல்லாம் வல்ல இறைவனை
இறைஞ்சுகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள்,
கல்லூரி அபிவிருத்திச் சபையினர்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை,
சுன்னாகம்.

(சி-4027)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்துக்கல்லூரியின் 'மூத்தகாவலன்'

# அமரர் என். சபாரத்தினம் அவர்களுக்கு

## பழைய மாணவர் சங்கம் சூடும் இதய அஞ்சலி மலர்

22 — 12 — 1992

## புகழ்பூத்த சான்றோன்

1967 ஆம் ஆண்டுகளில் யாழ். குடாநாட்டில் பல கல்லூரிகளை மிகப் பிரபல்யமான அதிபர்கள் சமகாலத்தில் அலங்கரித்தனர்.

அவர்கள் தங்களின் மேன்மையான அறிவு வளர்ச்சியினாலும், சமூக ஈடுபாட்டினாலும், கல்வி மேம்பாட்டிற்குத் தங்களை அர்பணித்தனர். இதனால் கல்வி உலகில் மிகவும் செல்வாக்குளளோராகக் காணப்பட்டனர். அவர்களுள் ஒருவரே அமரர் ந. சபாரத்தினம் அவர்கள். அக்கால கட்டக் கல்வியாள்களில் அமரர் ஒருவரே இம்மண்ணில் தனது கடைசி மூச்சு வரை கல்வி, சமய வளர்ச்சிக்காக வாழ்ந்தவர்.

அவர் தானொரு புகழ்பூத்த அதிபராக இருந்ததோடமையாமல் அடுத்த தலைமுறை அதிபர்களையும் வளர்ப்பதில் அதிக கவனம் செலுத்தியவர். நான் அதிபராக பதவி வகித்த ஆரம்ப காலங்களிலே எனது நல்ல செயற்பாடுகளைச் சுட்டிக் காட்டி என்னை உற்சாகப் படுத்திய சான்றோன் இவர் என்றும் என்னிதயத்தில் இருப்பார்.

அப்பாத்துரை பஞ்சலிங்கம்,
அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## மனிதருள் மாணிக்கம்

அமரர் ந. சபாரத்தினம் மனிதருள் மாணிக்கம். ஆழ்ந்த ஆங்கில அறிவும், சிறந்த தமிழ் எழுத்தாற்றலும் மிக்கவர். அரசியல் பற்றி நன்கு அறிந்தவர். அவர் இந்துக் கல்லூரியின் தலை சிறந்த அதிபர்களில் ஒருவர் என்பது இந்துக் கல்லூரி செய்ததவப் பயனேயாகும்

இராஜதுங்கம் மகேந்திரன்,
அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## முன்னோடி முதல்வர்

எனக்கு முன்னோடிகளாக இருந்த அதிபர்களுள் நான் முன்னுதாரணமாகக் கொண்ட சில அதிபர்களுள் அமரரும் ஒருவர். பதவி உயர்வு வந்த சந்தர்ப்பங்களில் எலலாம் அன்னார் வாழ்த்தி அனுப்பிய செய்திகள் என் மனதை என்றும் நிறைத்து நிற்கும். இந்து அன்னையின் மேல் அவர் கொண்டிருந்த விசுவாசமும், இந்து மைந்தர்களின் மேல் அவர் கொண்டிருந்த பாசமும் என்றும் மறக்க முடியாதவை. அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதில் நான் மன நிறைவு அடைகின்றேன்.

கனகசபை சின்னத்தம்பி குகதாசன்,
முன்னாள் அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## நல்ல சமயி

ஆங்கிலமு ், செந்தமிழும் செம்மையுறக் கற்றோன்; அறிவியல் வழிப்பட்ட அருளியல் தெரிந்தோன்; ஆரவாரமற்ற நல்ல சமயி; நல்லாசான்; நற்றுணைவன்; சொல்வல்லான்; சோர்விலான்; இவன் எங்கள் இந்துவின் மைந்தன். ஆசிரியன்; அதிபர்; சபாரத்தினப் பெரியோன்.

க. சிவராமலிங்கம்,
முன்னாள் பிரதி அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## காலத்தின் நாயகன்

அமரர் ந சபாரத்தினம் இன்று எம்மோடு இல்லை. ஆனால் அவர் கூறிய அறிவுரைகள்— நகைச்சுவையுடன் சேர்ந்த புத்திமதிகள்— இளமை குன்றாது எம் நினைவில் நிற்கின்றன. புதிய மாணவர்களுக்கு கல்லூரி அரங்கில் உரை நிகழ்த்தும் காலை அவர் கூறிய ஒரு கருத்து நினைவு கூரத்தக்கது.

''நான் காரைதீவான். காரைதீவில் நான் தான் முதல் பி. ஏ. பட்டதாரி. இப்ப பி. ஏ என்றால் 'சிம்பிள்'. நீங்கள் 'சிம்பிள்' பட்டதாரியாக வராமல் உயர் பட்டங்கள் பெற வேண்டும்''— என்று கூறினார். கால் நூற்றாண்டுக்கு முன்னரே வருங்காலத்தை கணித்துக் கூறிய கருத்து இது. காலததையும் காலத்தின் தேவையையும் உணாந்து செயற்பட்ட கல்விமான் அவர். அவர் பெயர் நீடூழி வாழ்க!

அவர் ஆன்மா சாந்தியடையப்
பிரார்த்திப்போமாக!

க. பூபாலசிங்கம்,
செயலர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## சிறந்த கல்விமான்

சிறந்த கல்விமானும், ஆங்கில இலக்கியத்தில் புலமை மிக்கவரும், உணர்வு பூர்வமான எழுத்தாற்றல் மிக்கவருமான அமரர் ந. சபாரத்தினம அவர்களை ஈன்றெடுத்தமையையிட்டு காரை மண் பெருமை பெறுகிறது. காரை இந்துக் கல்லூரியின் உப அதிபராக விளங்கி, கல்லூரிக்கு பெருமை சேர்த்தார். ஈழத்துச் சிதம்பர நடராசர் மீது அயராத அன்பு கொண்ட அண்ணாரின் ஆத்மா சாந்தியடைய ஈழத்துச் சிவகாமி சமேத சிதம்பர நடராசரை பிரார்திக்கின்றோம்.

எஸ். கே. சதாசிவம்.
பிரதிக் கொத்தணி அதிபர்,
காரைநகர்.



### அமரர் நமசிவாயம் சபாரத்தினம்

ஓய்வு பெற்ற அதிபர் யா- இ. க. (1964 — 1970)

தோற்றம்: 05 - 12 - 1913
மறைவு: 22 - 11 - 1992

## அமரரின் வாழ்க்கையில்.....!

தொகுப்பு: சுந்தரம் டிவகலாலா,
தலைவர், யாழ். இந்து-
பழைய மாணவர் சங்கம்

பிறப்பு: 05 — 12 — 1913 காரைநகர்
தந்தை பெயர்: நமசிவாயம்
தாய் பெயர்: தெய்வானைப்பிள்ளை
திருமணம்: 1942 — 08 — 23 இல் லீலாவதி அம்மையாரை திருமணம் செய்தார்.

கல்வி கற்ற பாடசாலைகள்:
- காரைநகர் இந்துக் கல்லூரி
- விக்ரோறியாக் கல்லூரி
- யாழ்ப்பாணக் கல்லூரி
- யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

உயர் கல்வி- இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு. பி. ஏ. பட்டதாரி.

ஆசிரியராகப் பணியாற்றிய பாடசாலைகள்:
- ஸ்கந்தவரோதயக் கல்லூரி
- இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம்
- சாவகச்சேரி இந்துக் கல்லூரி
- காரைநகர் இந்துக் கல்லூரி
- யாழ்ப்பாண இந்துக் கல்லூரி
- 1960 — 1963 வரை — யாழ் இந்துவின் துணை அதிபராக.
- 1964 — 1970 வரை — யாழ்.இந்துவின் அதிபராக.

அமரர் அலங்கரித்த ஏனைய பதவிகள்:
- அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர்.
- அகில இலங்கைச் சேக்கிழார் மன்றத்தின் துணைத் தலைவர்.
- காரைநகர் மாணிக்கவாசகர் சபையின் தலைவர்.
- ''சிலோன் ரீச்சேஸ்'' (Ceylon Teachers - Journal) சஞ்சிகையின் ஆசிரியர்.
- ஈழநாடு தினசரியின் ஆசிரியர்.
- யாழ். பல்கலைக்கழகக் கவுன்சிலின் உறுப்பினர்.

எழுதிய நூல்கள்
- National Education - It's Concept & Content.
- ஊரடங்கு வாழ்வு.
- Corridors of Peace. (- லண்டனில் அச்சில்)

(5 ஆம் பக்கம் பார்க்க)

## எங்கள் பிரார்த்தனை

மறைந்த மாமேதை, அமரர் ந. சபாரத்தினம் அவர்களின் ஆன்மா நற்பேறுற்று சாந்தியடைய எல்லாம் வல்ல எங்கள் இஷ்ட தெய்வம் ஞானவைரவ சுவாமியை அமரரது 31ஆவது நினைவு நாளான இத்தினத்தில் வேண்டி, இந்து சமூகத்தின் சார்பிலும் பழைய மாணவர் சங்கத்தின் சார்பிலும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

பாலசுப்பிரமணியம் நவபாலன்,
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்,
யா. இ. க.

## குறள் வழி வாழ்ந்தவர்

அடக்கமுடமை, அவை அஞ்சாமை அவை அறிதல், அறன் வலியுறுத்தல், அறிவுடமை, இன்னா செய்யாமை, ஊக்கம்-உடைமை ஒப்புரவறிதல், காலம் அறிதல், சான்றாண்மை, புறங்கூறாமை இவற்றின் இலக்கணமாக எம்மிடையே வாழ்ந்த பெரியார் அமரர் ந. சபாரத்தினம் அவர்கள்

யாழ் இந்துவில் அவர் ஆசிரியராகவும். அதிபராகவும் இருந்தகாலை அவருடன் சக ஆசிரியராக நெருங்கி உறவாடும் பெருமை எனக்குச் சித்தித்தது. இதன்பேறாக நான் கற்றவை பல.

அவர் பல்துறை சார்ந்த பெரியவர். அவர் புகழ் என்றும் வாழும்

நாகலிங்கம் சோமசுந்தரம்,
பிரதி அதிபர்,
யாழ்ப்பாணம், இந்துக்கல்லூரி.

## நடமாடும் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களின் வரிசையில் திரு. ந. சபாரத்தினம் அவர்களின் நாமம் நிச்சயம் நிலைத்து நிற்குமென்பதில் ஐயமில்லை. அவர் வெறும் அதிபராக மட்டுமல்லாது ஒரு தொழிற்சங்க பிரமுகராகவும், எழுத்தாளராகவும், சீரியசிந்தனையாளராகவும், கல்வியாளராகவும் ஒரு நடமாடும் பல்கலைக்கழக மாகவும் விளங்கினார். அன்னாரின் சேவையை யாழ். இந்து சமூகம் மட்டுமல்ல தமிழ்ச்சமுதாயமும இந்த நாடும் கூட என்ஞான்றும் போற்றி நினைவு கூருகின்றது என்றால் அது மிகையாகாது வாழவாங்கு வாழ்ந்த இப்பெரியாரின் ஆன்மா முத்தி நிலை அடையப் பிரார்த்திப்போமாக!

வண்ணை. சேனாதிராஜா, சிவராஜா,
மூத்த பழைய மாணவன், உப. அதிபர்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## காந்திய சிந்தனையாளர்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரான காலஞ்சென்ற திரு. ந. சபாரத்தினம் அவர்களின் மறைவு ஈடுசெய்ய முடியாததாகும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப்பீட அங்கத்தவராகவும், பேரவையில் அங்கத்தவராகவும் பணியாற்றிய போது அவரது சிறந்த செயற்பாடுகளைக் காணமுடிந்தது. சிறந்த ஆசிரியராகவும், அதிபராகவும், எழுத்தாளராகவும், பேச்சாளராகவும், மகாத்மா காந்தியின் சிந்தனைகளில் கவரப்பட்டவராகவும் விளங்கிய அவர், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு மட்டும லாது யாழ்ப்பாணத்திற்கே பெருமை தேடிக் கொடுத்தவராவார். அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக!

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை,
கலைப்பீடாதிபதியும்,
புவியியற்பேராசிரியரும்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

## அழியாப் புகழாளர்

அமரர் திரு. ந. சபாரத்தினம் ஆங்கிலப் புலமையும், தமிழ்ப்பற்றும் வாய்ந்த பெரியவர். கல்லூரி அதிபர், பத்திரிகை ஆசிரியர், சமூக நலப்பணியாளர் என்னும் நிலைகளில் அவர் ஆற்றி வந்த தொண்டுகள் அழியா மாண்பு படைத்தவை. அவர் தம் மேன்மையையும் சால்பையும் நமது சமூகம் என்றென்றும் நினைவு கூரும். அவர் புகழ் வாழ்க!

க. பரமேஸ்வரன்,
பதிவாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

## அஞ்சா நெஞ்சன்

போற்றுபவர் போற்றட்டும்! புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்! தொடர்ந்து செல்வேன்! ஏற்றதொரு கருத்தை என் உள்ளம் என்றால் எடுத்துரைப்பேன்; எவர்வரினும் அஞ்சேன்; நில்லேன்!—என்று உறுதியுடன் நின்று எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு மேலும் உரமிட்ட பெருமகன் அமரர் ந. சபாரத்தினம் அவர்களின் ஆத்மா சாந்தியடைய யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியர்களும், சக ஊழியர்களும் பிரார்த்திக்கின்றோம்.

பொ. வில்வராஜா,
தலைவர், ஆசிரியர் கழகம்,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி.

## இறைபக்தியாளன்

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் திரு. ந. சபாரத்தினம் அவர்களின் மறைவையிட்டு நாம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம் அன்னார் இறைபக்தி மிக்கவர். கடமை, நேர்மை ஆகியவற்றோடு கூடியவர்.

அன்னார் ஆன்மா சாந்தி எய்த எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

அதிபர், பிரதி அதிபர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/வ டுக்கோட்டை
இந்துக்கல்லூரி

## பைந்தமிழ் நாமம் கூறும்

வசந்தங்கள் கழிந்து நூறும்
கண்டிடும் சந்தம் ஊறும் - பாரில்
பாய்ந்திடும் கல்வி ஆறும் - இவர்
பைந்தமிழ் நாமம் கூறும்
காய்ந்திடும் கண்கள் மீறும் - நின்புகழ்
கண்டுமே மீண்டும் ஊறும்.

க. ஸ்ரீராம்,
சிரேஷ்ட மாணவ முதல்வன்,
யாழ். இந்துக்கல்லூரி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன முயல்கள் விற்பனைக்குண்டு. க. விக்னேஸ்வரன், அற்கின்ஸன் வீதி, (யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில்), வட்டுக்கோட்டை. (23727)

6''x2'' பாலைத்தீராந்தி 12 அடி நீளமுடையது, 22 தீராந்திகளும் 3 சோடி கிடைக்கதவுகளும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சந்திரன், அளவெட்டி தெற்கு, 3ஆம் கிளை ப. நோ. கூ. ச் அருகாமை (5462)

## மலிவு விற்பனை

அழகிய முறையில் கலண்டர்கள் பதிப்பித்துப் பெற்றுக்கொள்ள: ஸ்ரீலங்கா அச்சகம் (அச்சக வீதி). மலிவு விலையில் கலண்டர்கள் கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம் (23673)

## தேவை

பாடல்கள் ஒலிப்பதிவு செய்வதில் அனுபவமுள்ளவர்களும், T. V. வீடியோ டெக் திருத்துவதில் அனுபவமுள்ளவர்களும் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும் தொடர்பு: 'நியூ விக்ரேஸ் எலக்ரோனிக் கொம்பிளெக்ஸ்', B. M. C. ஒழுங்கை, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். [5669]

## வாடகைக்குத் தேவை

இடம்பெயர்ந்த குடும்பத்திற்கு வீடு / அனெக்ஸ் வாடகைக்கு தேவை. இருபாலை, கல்வியன்காடு கோப்பாய், திருநெல்வேலி பகுதிகள் விரும்பத்தக்கது. தொடர்பு கொள்க: சி. பரமேஸ்வரன் ஐயர், மே/பா திருமதி சுப்பிரமணியம், வைரவ கோவிலடி, இராசாவின் தோட்டம், நல்லூர் (23725)

## இலவச திருமண சேவை

27 வயது, திருவோணம், செவ்வாய் 8, B.Sc. Electronic Engineer, U.K இல் வேலை செய்பவருக்கு வரன் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, நாச்சிமார் கோவிலடி. (23720)

## அதிர்ஷ்டம் அழைக்கிறது

கடன்தொல்லை, குடும்பப் பிரச்சினை, தொழில் பிரச்சினை, கல்வித்தடை, விவாகத்தடை நீங்க சாதகத்துடன் நேரில் வரவும். சாந்தி பரிகாரங்கள் கூறப்படும். ஸ்ரீசக்தி கணேஷ உபாசகர், ஸ்ரீமாவை விநாயகர் சோதிட நிலையம், 158, கோவில் வீதி, நல்லூர் (23684)

## V.K.M. FARM

எம்மிடம் ஊர்க்குஞ்சுகள், முட்டை, பருவமுடைய (நான்கு மாதம்) பேட்டுக்கோழிகள், இறைச்சிக் கோழிகள், Bantam முட்டைகள் விற்பனைக்குண்டு. V. K. M. Farm, இல. 12, கன்க்சபை லேன், சிவலிங்கப் புளியடி (யாழ் இந்துக்கல்லூரிக்கு பின்பக்கம்) கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். (23718)

## மாமரச்செய்கை

கிளிநொச்சிக் கோட்டம் இராமநாதபுரம் பகுதியில் மாமரச்செய்கைத் திட்டமொன்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

சூழலைப் பாதுகாப்பதில் மரங்களின் இன்றியமையாத தேவையையும் — விறகுத் தேவைக்காக வன்னிப்பகுதியில் அதிகளவில் மரங்கள் தறிக்கப்படுவதனால் தறிக்கப்படும் மரங்களின் எண்ணிக்கையில் ஒரு குறிப்பிட்ட வீதத்தையேனும் ஈடுசெய்யும் நோக்கத்துடனும் — ஊட்டச்சத்துள்ள பழமரங்களை உற்பத்தி செய்யவும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. (த)

---

# தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயம்

நகர்ப்பணி - யாழ்ப்பாணம்,
41, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

## நத்தார் புதுவருட நிகழ்ச்சிகள்

24 12 - 1992 வியாழன் இரவு 11-30
நத்தார் ஆராதனையும், திருவிருந்தும்
நடத்துபவர்: மகாகனம் டி.ஜே. அம்பலவாணர்.

25 - 12 - 1992 வெள்ளி காலை 8-00
நத்தார் ஆராதனையும், திருவிருந்தும்
நடத்துபவர்: கனம் டி. ஆர் அம்பலவாணர்.

31 - 12 - '92 வியாழன் இரவு 11-30
விழிப்பிரவு ஆராதனையும், திருவிருந்தும்
நடத்துபவர்; கனம் ஜி.டி. ஆனந்தராஜன்.

01 - 01 - 19'3 வெள்ளி காலை -00
புதுவருட ஆராதனையும், திருவிருந்தும்,
நடத்துபவர்: கனம் டி. எஸ். தியாகராஜா.

03 - 01 - 1993 ஞாயிறு காலை 8-00
உடன்படிக்கை ஆராதனையும், திருவிருந்து ஆராதனையும், திடப்படுத்தல் ஆராதனையும்
நடத்துபவர்: மகாகனம் டி.ஜே. அம்பலவாணர்.
(5663)

---

கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் ஆலயம்

## கணக்குப்பிள்ளை தேவை

சைவ போசன, கடமை உணர்வு உள்ளவர் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் தீர்மானிக்கலாம்.

— நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை,

தொடர்பு கொள்க;
த. இ. பாலசுந்தரம்,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (23724)

---

# தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம்

(மருதனார்மடம் கோட்டம்)

## பொதுச் சபைக் கூட்டம்

இடம்: இணுவில் மத்திய கல்லூரி
காலம்: 23 - 12 - 92 (புதன்) காலை 9-00

விடயங்கள்:

1) சென்ற கூட்ட அறிக்கை
2) 1992ஆம் ஆண்டு வரவு - செலவு அறிக்கை
3) புதிய நிர்வாகசபை தெரிவு
4) பதிவுகள் புதுப்பித்தலும், புதிய இலக்கம் வழங்குதலும்

★ அனைத்து உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரவும்.

— செயலாளர்.

16 - 12 - 1992. (5655)

---

# நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு: 28 08 — 1908



உதிர்வு: 22 11 1992

## அமரர் வ. தர்மலிங்கம்

கலங்கரை விளக்காய் வந்துதித்து, எம்மை நிறைந்த வாழ்வுக்கு வழிப்படுத்திய மாண்புமிகு குடும்பத் தலைவனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியையில் பங்கு பற்றி, பல வழிகளிலும் உதவி, ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (22 - 12 - 1992) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்.

கற்பகப்பிள்ளையார் வீதி,
உரும்பராய். (23718)

---

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

ஜனவரியில் நடைபெற உள்ள எழுதுவினைஞர்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள்;

**ஆரம்பம்: 23-12 1992** பி. ப. 3-00

தொடர்ந்து 15 நாள் வகுப்புக்கள் நடைபெறும்.

ஆசிரியர்: அ. குமாரவேல்

(சி-2846) — நிர்வாகி.

---

கனவுகள் கண்ணீரில் கரையும்

# 2ஆவது ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

## தனபாலசிங்கம் பிருந்தன்

அன்னையின் மடியில்: **31—05—1985**
ஆண்டவன் அடியில்: **22—12—1990**

ஐந்தரை ஆண்டுதன்னில் ஆறாத நினைவு தந்தாய்
எத்தனை ஆண்டு சென்றாலும் தீருமோ எம்கவலை
மேதினியில் உன் அருமை தாய் தந்தை
அக்காவுடன், உனக்காகக் கடவுள் தந்த
உன் முகங்காணாத் தங்கையும்
சோகமதில் ஆழ்ந்திட - நீ
சொர்க்கமதில் புகுந்தனையோ
அனுதினமும் நின்பாதம் தொழும்;

அன்பு அப்பா, அம்மா, அக்கா - தனுஜா,
11-12-92இல் முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடிய தங்கை நிலஜா.


சரசாலை மத்தி,
சாவகச்சேரி.

இல. 4, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(23723)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



இறைவன் திருவடி நிழல் எய்திய

## சிதம்பரப்பிள்ளை கதிரவேல்

(இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்)

தோற்றம்: **23—11—1927**
மறைவு: **22—11—1992**

அன்புடனும், பாசத்துடனும் எங்களை எல்லாம் வளர்த்து, சிறப்புடன் வாழ வழிகாட்டிய எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைத் துதிக்கின்றோம்.

தங்கள் பிரிவால் வாடும்;
மனைவி, பிள்ளைகள்.

''கங்காசுதம்'',
பால்பண்ணை வீதி,
திருநெல்வேலி. (23712)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# எல்லைகள் நகர அனுமதிப்பதா?

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான எந்தத் திட்டமும், வடக்கு-கிழக்கு இணைப்பில்லாத் திட்டமாகவே இருக்க வேண்டும் என்பதில் பிரதான சிங்களக் கட்சிகள் இரண்டும் தமக்குள் இணக்கம் கண்டுவிட்டன. தெரிவுக்குழுவின் முடிவு அதனையே எடுத்தியம்புகிறது.

சிங்களக் கட்சிகளின் இக்கொள்கையின் ஆணி வேராக விளங்குவது தமிழர் தாயகத்தில் நடத்தப்படும் சிங்களக் குடியேற்றங்களாகும். கடந்த நாற்பது, ஐம்பது வருடங்களாக வடக்கு-கிழக்கில் நடந்து வரும் அரச ஆதரவுடைய, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால் தமிழர் தாயகத்தின் சுமார் மூன்றில் ஒரு பகுதி கபளீகரம் செய்யப்பட்டு விட்டது!

வடக்கையும் கிழக்கையும் நிலப்பரப்பால் இணைக்கும் பூகோள முக்கியத்துவம் உள்ளது மணலாறு. அந்த மணலாறைத் தாம் விழுங்கிக் கொண்டால், தமக்கென அபகரித்துக் கொண்டால், வடக்கையும் கிழக்கையும் நடைமுறையில் துண்டாடிவிடலாம் என்ற பெருந்திட்டம் சிங்களப் பேரினவாதிகளின் மனதில் பதிந்துவிட்டது; மனப்பாடமாகிவிட்டது.

அதனாலேயே அவர்கள் அங்கு புதிதாகக் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிப்பதில் மட்டுமன்றி, ஏற்னவே களவாடிய மண்ணைப் பாதுகாப்பதிலும் அக்கறை செலுத்துகிறார்கள். எல்லைக் கிராமங்களைப் பாதுகாக்கும் பலம் படையினரிடம் இல்லை என்று கருதுமளவுக்கு அங்கிருந்து அவர்கள் வாபஸாகிவிட்டனர்.

திட்டமிட்ட குடியேற்றப் பிரதேசங்களில் வாழும் மக்களைக் காப்பாற்றுவதற்கென விசேடமாகத் திரட்டப்பட்ட ஊர்காவல் படையினரில் பெரும் எண்ணிக்கையானோரும் ''பிச்சை வேண்டாம் நாயைப்பிடி'' என்று கூறுவது போல ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு ஓட்டம் பிடிக்கின்றனர்!

தட்டிப்பறித்த நிலங்களைப் பாதுகாக்க ஊர்காவல் படையினருக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டைப் போக்குவதற்கு இப்போது பெண் ஊர்காவல் படையை அரசு அமைத்திருக்கிறது. அவர்களுக்கு நவீன ரக ஆயுதங்களும் வழங்கப்பட உள்ளன. சிங்களப் பெண்கள் ஆண்களை விட வீரமும்; மனோபலமும் அதி முள்ளவர்களா என்பது இனிமேல் நடக்கும் ''சோதனைகள்'' மூலம்தான் தெரியவரும்!

அது எப்படியோ! எல்லைப் புறக் கிராமங்களின் பாதுகாப்பு நிலை சாண் ஏற முழம் சறுக்கும் சங்கடமாக இருந்தாலும் அரசாங்கமும், சிங்களப் பேரினவாதமும் விட்டபாடில்லை. வேண்டாம் இந்த உயிராபத்து என்று கூறி, குடியேற்றவாசிகளே கிராமங்களை குறிப்பாக மணலாறை விட்டு வெளியேறினாலும் கூட, அரசு விடப்போவதில்லை. தனது சகல வளங்களையும் சக்திகளையும் திரட்டிப் புதியவர்களையேனும் ஆசை வார்த்தை கூறி, வசதிகளைக்காட்டிக் கூட்டி வந்து குடியேற்றும்.

ஏனெனில் வடக்கையும் கிழக்கையும் பிரித்துவிட மணலாறை சிங்களப் பிரதேசமாக்குவது மிகப் பெரிய அளவில் உதவும் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது.

''நாம் எல்லைகளில் குடியேறாவிடின் எல்லைகள் எம்மை நோக்கி நகரும்'' என்று ஜே. ஆர். ஏழு ஆண்டுகளுக்கு முன் கூறியிருந்தார். இந்த அடிப்படையில் மணலாறை எல்லையாக்குவதற்கு மட்டும் அரசு உழைக்கவில்லை. அதனை ஒரு சிங்கள மாவட்டமாக்கவே முயற்சிக்கும்.

இவ்வேளையில் ஜே. ஆர் கூறியதைத் தமிழ்மக்கள் தமக்குப் பொருத்திப் பார்க்கவேண்டும். யாழ்ப்பாணத்திலிருந்து சென்று மணலாறில் குடியேற எத்தனை தமிழர் தயார்? போட்டி போட்டுக் கொண்டு நிற்கிறார்கள் என்று பதில் வந்தால் தான் சிங்களக் குடியேற்றங்களைத் தடுக்கலாம்! இல்லையேல்?.........!

---

### இடைக்கால அறிக்கை பற்றிப் பேச

# ஈ.பி.ஆர்.எல்.எவ். பிரமுகர் இந்தியா பயணமானார்

ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கத்தின் பதில் தலைவரும், எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கடந்த வாரம் இந்தியா பயணமானார் என்றும்—

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான இடைக்கால அறிக்கை பற்றி புதுடில்லியில் இந்திய அதிகாரிகளுடன் அவர் பேச்சு நடத்துவார் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

முதலில் சென்னையில் தங்கும் திரு. பிரேமச்சந்திரன் பின்னர் புதுடில்லி செல்வார் என்றும்— அங்கு வடக்கு-கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜப் பெருமாளையும் அவர் சந்திப்பார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-எ)

### வட - கிழக்கு நிரந்தர இணைப்பு:

# தொண்டமானின் சுருதி குறைந்து வருகின்றதாம்

வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பு விஷயத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் அதன் தலைவரான அமைச்சர் தொண்டமானும் இதுவரை கடைப்பிடித்து வந்த கடும்போக்கின் 'சுருதி' குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத் தரப்பின் அழுத்தம் மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸினுள் எழுந்துள்ள உட்பூசல் காரணமாகவே அமைச்சர் தொண்டமானின் நிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அரசியல் ஆய்வாளர்களை மேற்கோள் காட்டி 'சண்டே ரைம்ஸ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் எதிர்காலத் தலைவராக தனது பேரனை திரு. தொண்டமான் வளர்த்து வருவதாக இ. தொ. காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் சிலர் குற்றஞ்சாட்டியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது (த-எ)

### தெரிவுக்குழு இடைக்கால அறிக்கை;

# தொண்டா - செல்லச்சாமிக்கு இடையே கருத்து வேறுபாடு'

கொழும்பு, டிச. 22

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பாக அமைச்சர் தொண்டமானுக்கும், ராஜாங்க அமைச்சர் எம். எஸ். செல்லச்சாமிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீநிவாசன் யோசனைகளை அமைச்சர் தொண்டமான் பலமாக எதிர்த்து வருகின்றார் என்றும் —

தெரிவுக்குழுவின் இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டுள்ள யோசனைகளில் சில 'ஒட்டு' வேலைகளைச் செய்ய முடியும் என்று திரு செல்லச்சாமி அபிப்பிராயப்படுவதாகவும் 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டிருக்கிறது

# இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், டிச. 22

யாழ். மிட்ரவுண் ரோட்டறக்ட் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று குருநகர் பாடும் மீன் கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென் நிக்கலஸ் அணி மோதும். இந்த ஆட்டம் இன்று மாலை 4 மணிக்கு யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (உ)

---

## அமரரின் வாழ்க்கையில்......

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்ற நாடுகள்:

- ரோம் — உலக ஆசிரியர் சங்க மாநாடு
- பாரிஸ் o சூறிச் ஜெனீவா
- டெல்லி — இருமுறை மாகாநாடு சம்பந்தமாக.

சாதனைகள்:

- ஆங்கிலத்திலும், தமிழிலும் சரளமாகப் பேசும் ஆற்றல் மிக்கவர்.
- சமயச் சொற்பொழிவுகள் பலவற்றினை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நிகழ்த்திப் புகழ் பெற்றவர்
- ஷேக்ஸ்பியர், பேர்னாட்ஷோ, பேர்டின் ரஸல், மில்ரன், வெல்ஸ் போன்ற ஆங்கில அறிஞர்களுடைய நூல்களில் ஆழ்ந்த அறிவுடையவர். அதே சமயம் தமிழிலும், இந்து சமயத்திலும் மிக ஆழமான அறிவு படைத்தவர்
- யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸில், மறைந்த ஹண்டி பேரின்பநாயகம், பேராசிரியர் நேசையா போன்றவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்.
- இந்தியப் பிரதமர் நேரு, இந்திய ஜனாதிபதி சர்வபள்ளி இராதகிருஷ்ணன், மூதறிஞர் ராஜாஜி, ஜனாதிபதி ராஜேந்திரப் பிரஸாத் போன்ற தலைவர்களை நேரில் சந்தித்து தொடர்புகளை வளர்த்துக் கொண்டவர்.
- நிறைவாக, வாழ்நாளில் மனிதனொருவன் எந்த நேரமும் படிக்க முடியும் என்பதையும், எழுத முடியும் என்பதையும், சேவை செய்ய முடியும் என்பதையும் நிகழ்த்திக் காட்டியவர்.

அமரத்துவம்:

21 — 11 — 1992 ஆம் திகதி பிற்பகல் 1-30 மணியளவில் அதிபர் இவ்வுலகை விட்டு அமரரானார்.

யாழ். இந்துவின் சமூகம் இருக்கும் வரை அதிபரின்-அமரரின் - நினைவும் வாழும்! வளரும்!!

## ஆசானின் பெருமை

ஸ்ரான்லி வீதியால், மாலை வேளையில், கைத்தடியுடன் ஈழநாடு காரியாலயத்திற்கு செல்லும் ஆசானின் பெருமையை, அடுத்த நாள் காலையில், ஈழநாட்டு ஆசிரியர் தலையங்கமாக வரும் கட்டுரையை வாசிக்கும் போது உணரலாம். மாணவர் மனதில் சிரஞ்சீவியாய் திகழும் ஆசானை என்றென்றும் நினைவு கூர்வோம். அவர் ஆன்மா சாந்தியடைவதாக.

க. சண்முகநாதன்
பிரதிச் செயலாளர் - புனருத்தாபன அமைச்சு
வடக்கு - கிழக்கு மாகாண சபை—திருமலை.

## என் சபா

செய்வன எல்லாம் வையகம் உயரும்
செயர்களாய் விரியுமோர் நோக்கு
மெய்தளர்ந் தாலும் சிந்தனை, எழுத்து,
பேச்சினில் மினனுமோர் வீச்சு.
ஐயநீ தொட்ட அனைத்துமே துலக்கங்
காணுமுன் ஆளுமைப் பாங்கு
பொய்தவிர் வாயிற் புன்னகை - எல்லாம்
போயின வோமிநடும் பயணம்?

சோ. பத்மநாதன்
பிரதி அதிபர்,
[illegible] கலாசாலை,
திருநெல்வேலி.

---

# தெரிவுக்குழுவின் தீர்வு யோசனைக்கு ஒத்துழைக்க தொண்டா நிபந்தனை!

கொழும்பு, டிச 22

தற்போதுள்ள வடக்கு-கிழக்கு மாகாணங்களின் தற்காலிக இணைப்பை சில காலம் நீடிக்க அனுமதிப்பின். இனப்பிரச்சினைக்கு தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு கண்டுள்ள கருத்துடன்பாட்டுடன் ஒத்துப்போக நாம் தயாராக உள்ளோம்.

இவ்வாறு அமைச்சர் தொண்டமான் 'சண்டே ரைம்ஸுக்கு' அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கின்றார்.

இயல்பாகவே மனந்திறந்து பேசும் திரு. தொண்டமான் இப்பேட்டியை அளித்தபோது மிகவும் பக்குவமாகப் பேசினார் என்று சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

திரு தொண்டமான் சொன்னதாவது;

இனப்பிரச்சினை விசயத்தில் உடன்பாடு ஒன்றை ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக்கட்சி ஆகியன கண்டுள்ளன. இம்மாற்றம் மகிழ்ச்சி தருகின்றது.

வடக்கு-கிழக்கு தற்காலிக இணைப்புக் குறித்து தங்கள் போக்கை இக்கட்சிகள் மாற்றிக் கொள்ளுமானால் இந்த உடன்பாட்டுடன் ஒத்துப் போக நாம் தயாராக உள்ளோம்.

குறைந்தது இன்னொரு வருடம் இத்தற்காலிக இணைப்பு நீடிக்கட்டும். தேர்தல் ஒன்று இடையில் நடத்தப்பட முடியும். இணைப்புப் பற்றிய இறுதி முடிவை பின்னர் எடுக்கலாம் — இவ்வாறு அவர் கூறினார்.

இதேவேளை —

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விஷயத்தில் இந்த ஐந்து கட்சிகளும் கூட்டாக எடுத்துள்ள நிலைப்பாட்டை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்குழு பாராட்டியுள்ளது.

தற்காலிக இணைப்புக் குறித்து இக்கட்சிகள் மீள் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் —

தற்காலிக இணைப்பை இன்னும் சில காலம் நீடிக்கச் செய்ய வேண்டும் என்றும் கடந்த வியாழன் நடந்த செயற்குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டது. (த-எ)

# நாளை

யாழ்ப்பாணம் டிச. 22

யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் இதுவரை காலமும் கற்கை நெறிகளை முடித்துக்கொண்டு வெளியேறிய மாணவர்களின் சந்திப்பு நிகழ்ச்சி ஒன்று நாளை காலை 10 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் நுண்கலைப் பிரிவில் நடைபெறும் என கவின்கலை மன்றம் தெரிவித்துள்ளது.

★ ★ ★

யாழ் மாநகராட்சி மன்ற ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் ''கிறிஸ்து பிறப்பு விழா'' நிகழ்ச்சிகள் நாளை காலை 10 மணிக்கு மாநகராட்சி மன்ற முன்றலில் நடைபெற விருக்கின்றன.

★ ★ ★

யாழ். செயலக நலன் புரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் கிறிஸ்மஸ் ஒளி விழா நாளை பிற்பகல் 2 மணிக்கு செயலக ஆலோசனை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

★ ★ ★

மானிப்பாய் ''அசம்லி ஓவ் கோட்'' ஆலயத்தில் நாளை பிற்பகல் 3 30 மணிக்கு நத்தார் கீதங்கள் இசைத்தல், வண்ணார்பண்ணை வாலிபர் நிகழ்ச்சி, சிறுவர் பரிசு வழங்கல் ஆகிய நிகழ்ச்சிகள் இடம் பெறும். (உ-5, 100)

---

## சமாதான முயற்சி ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

தாக அறிவித்துள்ளன.

இதேவேளை —

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன், ''உறுதியான — செயற்படுத்தக் கூடிய — கௌரவமான — சமாதானத்தை நாம் விரும்புகின்றோம். அதன் காரணமாகவே பேரழிவு தரும் யுத்தத்திற்கு மத்தியிலும் சமாதானத்துக்கான கதவுகளை நாம் திறந்து வைத்துள்ளோம்'' — என்று கூறியிருககிறார்.

இப்படியான அறிக்கைகளை குறைகண்டு நிராகரித்துவிடாமல். அவற்றில் காணப்படும் நல்லெண்ணத்தை நாம் மதிக்க வேண்டும் அப்போது சமாதானம் ஏற்படக்கூடிய வாய்ப்பு நாட்டின் அவசர நிகழ்ச்சி அட்டவணையில் இடம் பெறலாம்''. இப்படி நத்தார் தினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-எ)

---

### ஆண்டு 6 வகுப்புக்கு

# யாழ். இந்து, வேம்படியில் அனுமதிப் பரீட்சை இல்லை

## ஏனையவற்றில் 26 ஆம் திகதி

யாழ்ப்பாணம், டிச. 22

தேசியப் பாடசாலைகளான யாழ் இந்துக் கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் ஆறாம் ஆண்டு வகுப்புக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் நடைபெற மாட்டா. கல்வித் திணைக்கள அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இப்பாடசாலைகளில் 6 ஆம் ஆண்டு வகுப்புக்குச் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க, இப்பாடசாலைகளில் அனுமதி கோரி விண்ணப்பித்திருக்கும் — 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த — மாணவர்களின் எண்ணிக்கை அதிகம் என்றும்—

இதனால் புலமைப் பரிசில் பரீட்சையில் கூடுதல் புள்ளி பெற்ற மாணவர்களைக் கொண்டே இப்பாடசாலைகளில் 6 ஆம் ஆண்டு வகுப்புகளுக்குள்ள வெற்றிடங்கள் நிரப்பப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய பிரபல்ய பாடசாலைகளில் ஆண்டு 6 க்கு மாணவர்களைச் சேர்க்கும் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும். (உ-3]

### 30 கோடி ரூபா நட்டஈடு கோரி

# மக்கள் வங்கியின் மீது உப சபாநாயகர் வழக்கு

கொழும்பு, டிச 22

'ராவய' சிங்களவார இதழ் ஆசிரியரிடம் தமது வங்கி இரகசியங்களை பகிரங்கப்படுத்தியதற்கு நட்டஈடாக 30 கோடி ரூபா தரும்படி உபசபாநாயகர் காமினி பொன்சேகா மக்கள் வங்கி மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறார்.

அம்பாந்தோட்டை மாவட்ட நீதிமன்றத்தில் திரு. பொன்சேகாவின் சட்டத்தரணிகள் இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளனர்.

மக்கள் வங்கி தமது சட்டபூர்வமான கடமைகளை மீறி தமது வங்கிக் கணக்கு விவரங்களை 'ராவய' சிங்கள வார இதழ் ஆசிரியருக்கு வழங்கியதாகவும்—

அவ்விவரங்களை வைத்து அப்பத்திரிகை தம்மை அவதூறு செய்யும் விதத்தில் திரிபுபடுத்தப் பட்ட பொய்யான கட்டுரையை வெளியிட்டதாகவும் திரு பொன்சேகா தனது முறைப்பாட்டில் தெரிவித்திருக்கிறார்.

1973 இல் வீரவிலவில் தாம் ஆரம்பித்து நடத்தி வந்த செனசும ஓய்வு விடுதி பற்றிய வங்கிக் கணக்கு விவரங்களையே 'ராவய' பத்திரிகை பிரசுரித்தது என்றும் வழக்கில் தெரிவிக்கபபட்டுள்ளது. (த எ)

### சு. க. கூட்டத்தில் தீர்மானம்;

# ஜனவரியில் பாதயாத்திரை; பெப்ரவரியில்பொதுக்கூட்டம்!

கொழும்பு டிச 22

எதிர்வரும் ஜனவரியில் இருநாள் பாதயாத்திரை நடத்துவது என்றும் —

பெப்ரவரி மாதத்தில் ஒரு நாளில் 100 பொதுக்கூட்டங்களை நாட்டில் நடத்துவது என்றும் — கடந்த திங்கட்கிழமை நடந்த சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அமைதியான சூழ்நிலையில் இக்கூட்டம் நடைபெற்றது திருமதி சந்திரிகா குமாரணதுங்கா உட்பட புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். அனுரா பண்டாரநாயக்காவும் பங்குபற்றினார்.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையில் அவரது வாசஸ்தலத்தில் நடந்த அக்கூட்டத்தில் மாகாணசபைத் தேர்தலின் போது கடைப்பிடிக்கப்பட வேண்டிய உத்திகள் பற்றியும் ஆராயப்பட்டது.

காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் நினைவு தினத்தை ஒட்டி ஜனவரி 7, 8 ஆம் திகதிகளில் ஹொரகொல்லையில் இருந்து கொழும்பு வரை பாதயாத்திரை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது

பிரச்சினைக்குரிய உட்கட்சித் தேர்தல், இடைநிறுத்தம் செய்யப்பட்ட எம். பிக்கள் விவகாரம் மற்றும் மத்திய குழுவுக்கு புதிய உறுப்பினர்களும், புதிய மாவட்ட அமைப்பாளர்களும் நியமனம் செய்யப்பட்டமை ஆகியன இக்கூட்டத்தில் விவாதிக்கப்படவில்லை. (த-எ)

# வாஜ்பாய் நிராகரிப்பு

புதுடில்லி, டிச. 22

காலவரையற்ற உண்ணாவிரதத்தை கைவிடும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோளை பாரதீய ஜனதா தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாய் நிராகரித்து விட்டார்.

இவ் வேண்டுகோளை மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் விடுத்திருந்தார்.

# கான்ஸ்டபிள் மரணம்

கோட்டை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள் ஒருவர் அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானதாக அறிவிக்கப்படுகிறது

கடமையிலிருந்த மெண்டிஸ் (வயது 26) என்பவரே மரணமானவராவார். அவர் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்
நடத்தும்

**'ராஜன்ஸ்'**

இசைக் குழுவினர் வழங்கும்

## "இன்னிசை மழை"

வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டபம்
27 - 12 - 92 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி

(ரிக்கட்டுக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் முன் கூட்டியே பெற்று ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள்.)

ரிக்கட் கிடைக்கும் இடங்கள்:-

1) 233, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.
2) ச(f)வாரீஸ் (கண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)

(சி-4026)

# மரண அறிவித்தல்கள்

## மார்க்கண்டு மகாதேவா

(B.Sc, நியுயோர்க்-அமெரிக்கா, முன்னாள் ஆசிரியர் யாழ். மத்திய கல்லூரி)

திருநெல்வேலி கிழக்கு ஆடியபாத வீதியை பிறப்பிடமாகக் கொண்ட மார்க்கண்டு மகாதேவா கடந்த 12-12-92 இல் அமெரிக்காவில் காலமானார்.

இவர் தவலோகநாயகியின் அன்புக்கணவரும், வரேந்திரா(நியுயோர்க் பல்கலைக் கழகம்), தவேந்திரா ஆகியோரின் அருமைத் தந்தையாரும், கனகையா, பாலசிங்கம் ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 19-12-92 இல் நியுயோர்க்கில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

அன்னாரது கல்வியங்காடு இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

தகவல்;
மா. கனகையா
(சகோதரர்)

இல, 37, மருத்தித்துறை வீதி,
நல்லூர் மார்கற்,
கல்வியங்காடு.

## வேலுப்பிள்ளை முத்துக்குமாரு

காரைநகர் ஆயிலியை சேர்ந்த வேலுப்பிள்ளை முத்துக்குமாரு 20-12-92 இல் காரைநகரில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற தங்கமுத்துவின் அன்புக் கணவரும், சரஸ்வதி, சோமசுந்தரம் (விவசாய உத்தியோகத்தர், திருநெல்வேலி), மாணிக்கம், திருநீலகண்டன், சபாரத்தினம், சுந்தரலிங்கம், சிவஞானம் (அதிபர், சிவஞானோதய வித்தியாசாலை), கணேசன் விசயலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், தம்பிராசா, இந்திராதேவி, காலஞ்சென்ற உருத்திரமூர்த்தி, செல்வராணி, மகேஸ்வரி, நீலாரஞ்சனி, கமலாம்பிகை, தேவி, அம்பிகைபாகன் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (21-12-92) காரைநகரில் நடைபெற்றன.

(ஆனைப்பந்தி வளவு, தொல்புரம் மேற்கிலுள்ள சோமசுந்தரத்தின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.)

தகவல்:
சோமசுந்தரம்

(5668)

## இரத்தினம் உதயரத்தினம்

வலி - கிழக்கு பிரதேச சபை (மின்பகுதி) ஊழியரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்க உறுப்பினருமான இரத்தினம் உதயரத்தினம் காலமாகிவிட்டார்.

அன்னார் ஒய்வுபெற்ற கடற்படை வீரர் தி. இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், யோகராணியின் அன்புக் கணவரும், உதயராணி, இரத்தினகுமார் (கோபால் ஜேர்மனி), ஜெயக்குமார் ஆகியோரின் சகோதரரும், அன்ரன் பிரேமதாசா (ஆசிரியர், கனகபுரம் G.T.M.S)வின் மைத்துனரும், அஜிதா, அனிதா, அர்ச்சுனா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று செவ்வாய்க்கிழமை (22-12-92) பி பகல் 3.00 மணிக்கு உரும்பராய் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. இரத்தினம் (தந்தை)
(நேவி)

உரும்பராய் கிழக்கு.

(23733)

## திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு

அரியாலையைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி கதிரவேலு அவர்கள் 19-12-92 அன்று மட்டக்களப்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வித்துவான் வீ. கதிரவேலு அவர்களின் அன்பு மனைவியும், நவரத்தினம் பொன்னம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திருமதி சியாமளா புஷ்பராஜா (ஆசிரியை, கைதடி), திருமதி ரஞ்சனி ரகுநாதன் (கல்வியங்காடு), பாலச்சந்திரன் (நில அளவை அத்தியட்சகர், மட்டக்களப்பு), திருமதி சுமித்திரா விஜேந்திரா (பிரான்ஸ்), செல்வி கௌசல்யா (யாழ். பல்கலைக்கழகம்), திருமதி பிருந்தா சிவகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், ப. புஸ்பராஜா (நில அளவையாளர்), சு. ரகுநாதன் (கல்வியங்காடு), திருமதி பா. ரோகினி, வி. விஜேந்திரா (பிரான்ஸ்), தி. சிவகுமார் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி அருள்துரை (இளைப்பாறிய ஆசிரியை), ந. தியாகராஜா (கனடா), ந சண்முகராஜா (சந்திரா), திருமதி பரமேஸ்வரி குணம், ந. யோகராஜா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 59, பாரதி வீதி, மட்டக்களப்பில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நேற்று நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ரஞ்சனி ரகுநாதன்
செல்வி க. கௌசல்யா

18, முள்ளி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(23726)

ஜி. சீ. ஈ. விடைத்தாள்கள்

# கொழும்புக்கு எடுத்து செல்வது தடைப்பட்டது

யாழ்ப்பாணம், டிச. 22

ஜி. சீ ஈ. [சாதாரண] பரீட்சை விடைத்தாள்களைக் கொழும்புக்கு எடுத்துச் செல்லும் பணி தடைப்பட்டது.

ஏற்கனவே திட்டமிட்டபடி, விடைத்தாள்கள் பருத்தித்துறை துறைமுகத்துக்கு நேற்றுக்காலை எடுத்துச் செல்லப்பட்டன. அவற்றுடன் கொழும்பு செல்வதற்கு யாழ். கல்விப் பணிப்பாளரும், அவரது அதிகாரியும் அங்கு சென்றிருந்தனர்.

ஆனால் விடைத்தாள்களை ஏற்றிச் செல்ல ஏற்பாடாகியிருந்த ''நில்கிரி'' இழுவைப் படகு (Tug Boat) அந்தப் பணிக்கு உகந்ததல்ல என்பது கண்டறியப்பட்டது. இழுவைப் படகிற்குள் கடல் நீர் காற்றினால் வீசப்படுவதால் விடைத்தாள்கள் நனைந்து போகும் சாத்தியம் உண்டு.

அதனால் விடைத்தாள் பொதிகள் யாழ்ப்பாணம் திருப்பி எடுத்துவரப்பட்டன

இதேவேளை கொழும்பிலிருந்து இரண்டு மிதவைப் படகுகளைக் (Barges) கொண்டு வந்த ''நில்கிரி'' பருத்தித்துறையில் விபத்துக்குள்ளானது

மிதவைப் படகுகள் கட்டப்பட்டிருந்த கயிறு ''நில்கிரி''யின் விசைதண்டுக்குள் சிக்குண்டதால் இவ் விபத்து நிகழ்ந்தது.

சிக்குண்ட கயிற்றினை அகற்றுவதில் நேற்று மாலை சுழியோடிகள் ஈடுபட்டிருந்தனர். (அ- -5-111)

## இன்று

வண்ணார்பண்ணை, டிச. 22

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி பயிற்சித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி கொத்தணி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கு இன்று பிற்பகல் 1. 30 மணிமுதல் சாவகச்சேரி அமிர்தாம்பிகை வித்தியாசாலையிலும்—

கொடிகாமம் கொத்தணி சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான கருத்தரங்கு இன்று காலை 9 மணிமுதல் திருநாவுக்கரசு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் நடைபெறும். (உ-162)

## ஏப்ரல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் ஐக்கிய முன்னணி, ஸ்ரீலங்கா மக்கள் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, முற்போக்கு முன்னணி ஆகியவை ஸ்ரீ. ல. சு. கட்சித் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்காவை பொது வேட்பாளராக ஏற்றிருப்பதாக ஸ்ரீ. ல. சு. கவின் செயலாளர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்.

இதேசமயம்—

ஜனாதிபதித் தேர்தலில் தமது கட்சி வேட்பாளர் நிச்சயமாகப் போட்டியிடுவார் என்று லலித்தின் கட்சியின் — ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் — செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திரா தெரிவித்தார். (உ-எ-6)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## பேரின்பநாயகம் ஜோர்ஜ் சுரேஸ்குமார்

| அன்னையின் மடியில்: | வாகன அரக்கன் அழிவில்: |
|---|---|
| 29 — 09 — 1972 | 23 — 11 — 1992 |

எங்கள் குடும்ப விளக்காய் திகழ்ந்தவனே! பண்பு பாசம், நற்சீலம், அன்புள்ளம் ஆகிய நற்குணங்களை அணிகலனாகக் கொண்டவனே! எல்லோருடைய உள்ளங்களையும் உனது உத்தம குணங்களால் கொள்ளை கொண்டவனே! எங்கள் அன்புப் புத்திரனே! எங்கு சென்று மறைந்தாயோ!

வான் மழையின்றி வாடிடும் பயிர் போல்
நாம் உனைப்பிரிந்தே வாடுகின்றோம்

எம் அன்புப் புத்திரனுடைய விண்ணில் பிறப்பு விழாவில் பங்குபற்றியவர்கள், மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்கள், இவருடைய இறுதி யாத்திரையில் விசேட கௌரவம் அளித்து சிறப்பித்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்குழாம் ஆகியோருக்கும், அவ் யாத்திரையில் பங்குபற்றியோர்களுக்கும், விஷேட விதமாக பண அன்பளிப்புச் செய்த ஸ்கந்தவரோதயாக் கல்லூரியினருக்கும், சண்டுலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தினருக்கும், சுன்னாகம் இந்து இளைஞர் மன்றத்தினருக்கும், எமது சோகங்களில் பங்கு கொண்டோர் அனைவருக்கும், எமக்கு பலவழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகள் பல கூறுகின்றோம்.

இதனைக் கண்ணுறும் ஆசான்கள், அன்பர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர் யாவரையும் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 23 - 12 - 1992 இல் நடைபெற இருக்கும் விருந்துபசாரங்களிலும் பங்குபற்றி, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

எங்கள் பாசம் நிறைந்த அன்புப் புத்திரனே
உன் பிரிவால் தாங்க முடியாத
சோகமே உருவாக இருக்கும்:

**உன் ஐயா, அம்மா, தம்பி, தங்கை,**
**சிறியதகப்பன்மார், சிறிய அன்னையர்கள்,**
**மாமன்மார், மாமிமார்,**
**ஒன்றுவிட்ட சகோதரங்கள்,**
**மச்சான்மார், மச்சாள்மார்,**
**நண்பர்கள், ஆசான்கள், உறவினர்கள்.**

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

(5458)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனப்பிரச்சினைக்குத் தீர்வு; றொனி சமர்ப்பிப்பாராம்!

கொழும்பு, டிச. 22

ஜனாதிபதி பிரேமதாஸவை நான் சந்திக்கும்போது இனப்பிரச்சினைக்கான எனது அரசியல் தீர்வை சமர்ப்பிப்பேன். நான் எப்பொழுது அவரை சந்திப்பேன் எனக் கூறமுடியாது. ஏனெனில் எப்பொழுது அவர் என்னை அழைப்பார் என எனக்குத் தெரியாது.

நாடு திரும்பியுள்ள முன்னாள் நிதியமைச்சர் றொனி டி மெல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நான் கொலைகளை என்றும் கண்டிப்பவன். அமைதியையும், சமாதானத்தையும் விரும்புபவன். **இனப்பிரச்**சினைக்கான தீர்வு **ஒற்றை**யாட்சி முறைக்கு உட்பட்டதாக அமையவேண்டும். — இவ்வாறு அவர் மேலும் சொன்னார். (த-எ)

## விமான விபத்தில் 320 பேர் பலி

லிஸ்பன், டிச. 22

போர்த்துக்கல் நாட்டின் தென் பகுதியில் பயணிகள் விமானம் ஒன்று தீப்பிடித்து வெடித்துச் சிதறியதில் 320 பேர் உயிரிழந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## கமநல சேவை அலுவலர் பரீட்சை

கமநல சேவைகள் பெரும்பாக அலுவலர் தெரிவுக்கான நேர்முகப் பரீட்சைக்கு கடந்த மாதம் 24-ஆம் திகதி கொழும்பில் சமுக மளிக்கமுடியாதவர்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பிந்திய திகதிகளிலும் சமுகமளிக்கலாமெனத் தெரியவந்துள்ளது.

யாழ் மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள சிரேஷ்ட உதவி ஆணையாளர் இதனை அறிவித்துள்ளார். (க-162)

# 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 05 — 10 — 1918 |  | 22 — 12 — 1991 |

அமரர்

## சூசைப்பிள்ளை அருளானந்தம்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய், நற்பாசத்தின் உறைவிடமாய் பண்பின்சிகரமாய், எம்மையெல்லாம் நல்வழிகாட்டி, இல்லறமென்ற நல்லறத்தை இனிதே நடத்திய உங்களை எம் உள்ளத்தில் என்றும் நிலை நிறுத்தி வாழ்வோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார், உறவினர்கள்.

திரு. இ. அருளானந்தன்,
36, புனித யுவானியார் கோவில் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(23703)

# மரண அறிவித்தல்கள்

## இன்னாசிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை

யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும், பிரதான வீதி, தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் தற்போது பிரதான வீதி, சுன்னாகத்தில் வசித்தவருமாகிய இன்னாசிப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை (இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்) நேற்று இறைவனடி சேர்ந்துள்ளார்.

இவர் ஞானம்மா அந்தோனிப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை — தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளி) அவர்களின் அன்புக் கணவரும், றஜிதா (ஆசிரியர், யூனியன் கல்லூரி), றஜீஸ், றனீற்றா (கொழும்பு), றஞ்சிற் (லண்டன்), றெஜினோல்ட் றாஜ் (யாழ். பல்கலைக் கழகம், வர்த்தக பீடம்) ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், ஈச்சமோட்டை வீதியைச் சேர்ந்த அருளம்மா அவர்களின் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் 22 - 12 - 92 (இன்று) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம் அந்தோனியார் சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ஞா. அந்தோனிப்பிள்ளை

''லஷ்மி பவனம்''
பிரதான வீதி,
சுன்னாகம்.

(5464)

## திருமதி இராஜேஸ்வரி பிறைசூடி (பபா)

சிறாம்பியடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி இராஜேஸ்வரி பிறைசூடி (பபா) 20-12-92 இல் கொழும்பில் காலமானார்.

இவர் பிறைசூடி (வசந்தன்)யின் அன்பு மனைவியும், பிரதீபா, தர்சிகா, காண்டீபன், கம்சநதி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுகொகள்ளவும்.

தகவல்:
கலா
(தங்கை)

62, செட்டித்தெரு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(23738)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 22-12-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.